RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2533

OPEN ACCESS

# அகநானூற்றில் சேர வேந்தர்கள் பற்றிய பதிவுகள்

**பி. சீதா லட்சுமி [அ, *], எஸ். கலைவாணி [அ]**

[அ] தமிழ்த்துறை, மதுரை சிவகாசி நாடார்கள் முன்னோடி மீனாட்சி மகளிர் கல்லூரி, பூவந்தி, இந்தியா

# The Chera Rulers in Akananuru: A Historical Study

**P. Seetha Lakshmi [a, *], S. Kalaivani [a]**

[a] Department of Tamil, Madurai Sivakasi Nadars Pioneer Meenakshi Women's College, Poovanthi, India

* Corresponding Author: seethaprajin@gmail.com

**ABSTRACT**

The term Muvendar refers to the three crowned dynasties—the Chera, Chola, and Pandya kings—who ruled ancient Tamilakam. They are traditionally celebrated as the "Mudiyudai Muvendar" (the Three Crowned Kings), as they alone possessed the royal privilege of wearing the crown during the early historical period. These rulers formed the principal royal dynasties of ancient Tamil society and are frequently mentioned in Sangam literature. Among the three dynasties, the Cheras are often accorded primary importance in literary references. Akananuru, one of the anthologies of the Ettuthokai (Eight Anthologies) of Sangam literature, contains numerous references to the Chera kings, offering valuable insights into their history, political achievements, and cultural significance. This article examines the historical records and literary portrayals of the Chera rulers in Akananuru, highlighting their contribution to the political and cultural heritage of ancient Tamilakam.

**Keywords:** Sangam literature, Akananuru, Muvendar, Chera rulers.

## முன்னுரை

மூவேந்தர் என்பது பண்டைய தமிழகத்தை ஆண்ட சேர, சோழ, பாண்டிய மன்னர்களைக் குறிக்கும். மூவேந்தரை 'முடியுடை மூவேந்தர்' எனச் சிறப்பித்துக் கூறுதல் மரபு. முதற்காலத்தில் முடி அணியும் உரிமை இவர்களுக்கு மட்டுமே இருந்ததாலேயே இவர்கள் வேந்தர் எனப்பட்டனர். இவ்வேந்தர்கள் முறையே சேர, சோழ பாண்டியர் என அழைக்கப்பட்டனர். இவர்கள் பற்றிய பல குறிப்புகள் சங்க இலக்கிய எட்டுத்தொகை நூலான அகநானூற்றில் காணப்படுகிறது. இம்மூவேந்தர்கள் வரிசையில் முதலில் வைத்துப் பேசப்படுபவர் சேரர் ஆவர். இச்சேரர் குறித்த வரலாற்றுப் பதிவுகள் அகநானூற்றில் இடம்பெறுமாற்றை இக்கட்டுரை விளக்குகிறது.

## சேரர்கள் பற்றிய வரலாற்றுப் பதிவுகள்

பேச்சுவழக்கில் மூவேந்தர்களுள் முதலில் சுட்டப்பெறுபவர் சேரர். இச்சேர வேந்தர்களுள் உதியஞ்சேரல், சேரன் செங்குட்டுவன், இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், மாந்தரம் பொறையன் கடுங்கோ ஆகியோர் பற்றிய வரலாற்றுப் பதிவுகள் இடம் பெற்றுள்ளன. சேரவேந்தர் குடியில் பொறையர் என்றும் உதியர் என்றும் இருபெரும் பிரிவினர் தமிழகத்திலிருந்து ஆட்சி செய்து வந்தனர் என்பதை சங்க இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன.

பொறை என்பது பாறை அல்லது பொற்றை அல்லது குன்று என்று பொருள்படும். இரு என்ற சொல் பெருமையைக் குறிக்கும். இரும்பொறை என்பது பொறையர்களின் தலைவன் எனப் பொருள்படும். இப்பொறையர் குடியின் தலைநகர் மாந்தை ஆகும். இதனை,

'நல்நகர் மரந்தை முற்றத்து ஒன்னார்' (அகம். 127)

'மரந்தை அன்ன என் நலம் தந்து சென்மே' (அகம். 376)

என்ற வரிகள் விளக்குகின்றன. இத்தகைய தலைநகரையுடைய சேரர் குறித்த வரலாற்றுப் பதிவுகள் அகநானூற்றில் 32 இடங்களில் பதிவு செய்யப்பெற்றுள்ளன.

வானவரம்பனின் வீரம்: (ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்)

வானவரம்பன் தண்டாரண்யாவிலுள்ள மலைவாழ் மக்களை வெற்றி பெற்று ஆடு மாடுகளைக் கவர்ந்து குடநாட்டிலுள்ள அந்தணர்களுக்குப் பரிசாக வழங்கினான். 'ஆடுகளைப் பிடித்து வந்ததால் ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் ' என்ற பெயர் வந்தது.

வானத்தையே எல்லையாகக் கொண்டு அரசாண்டதால் வானவரம்பன் என்று பெயர் பெற்றிருக்கலாம் எனக் கருதுவாரும் உளர். வானவரம்பனின் ஆட்சிக்காலம் 38 ஆண்டுகள் என்பதை பதிற்றுப்பத்தின் வாயிலாக அறியமுடிகிறது. வானவரம்பனின் ஊர் வெளியம் என்பதை 'வானவரம்பன் வெளியத்து அன்ன' என்று மாமூலனார் குறிப்பிடுகின்றார்.

'கடல்கால் கிளர்ந்த வென்றி நல்வேல்,

வான வரம்பன் அடல்முனைக் கலங்கிய

உடைமதில் ஓர்அரண் போல,

அஞ்சுவரு நோயொடு துஞ்சா தேனே' (அகம். 45)

என நக்கீரர் மற்றொரு பாடலில், பிரிந்து சென்ற தலைவனை எண்ணித் தலைவி புலம்புவதைக் கண்ட தோழி ஆறுதல் கூறுகிறாள். ஆயினும் தலைவியின் துன்பம் குறையவில்லை என்பதை விளக்க, சேர இளவரசன் ஆட்டனத்தியைக் கடல் அலை இழுத்துச் சென்றபோது சோழன் மகள் ஆதிமந்தி எவ்வாறு வருந்தி அலைந்து திரிந்தாளோ அதைப் போலவும், வீரமிக்க வானவரம்பனின் போராற்றலைக் கண்டு அரணில் தங்கியிருந்தோர் அச்சமுற்றுத் துயிலாமல் இருந்ததைப் போலவும், தலைவியின் புலம்பல் இருந்தது என்பதற்கு மேற்கண்ட வரலாற்று நிகழ்வு கூறப்பெற்றுள்ளது.

## சேரன் நெடுஞ்சேரலாதன்

சேரவேந்தன் தனது பகைவனான ஆரிய வேந்தர்களை அலறும்படித் தாக்கிப் பெரும்புகழ் கொண்ட இமயமலையில் தன் அடையாளமான விற்கொடியினைப் பொறித்தவன். கடுஞ்சினம் கொண்டு பகைவர்களைப் பிணித்தவன். இத்தகைய வீரச்சிறப்புடைய சேரனின் வஞ்சி நகரானது பரத்தையின் அழகிற்கு உவமையாக்கப் பெற்றுள்ளது. இதனை,

'ஆரியர் அலறத் தாக்கி பேர்இசைத்

தொன்றுமுதிர் வடவரை வணங்குவில் பொறித்து

வெஞ்சின வேந்தரைப் பிணித்தோன்

வஞ்சி அன்ன, என் நலந்தந்து சென்மே' (அகம். 396)

என்ற வஞ்சி அன்ன என் நலத்தினைத் தந்து விட்டுச் செல்க என்கிறாள் பரத்தை. தலைவனுடன் ஊடல் கொண்ட காதல் பரத்தைத் தலைவனைப் பார்த்து நீ என்னை விட்டுப் பிரிந்து செல்லாதே. ஏனெனில் ஆட்டனத்தியின் ஆடலைக் கண்டு பெரு நீர்ப்பெருக்குடைய காவிரியாறு அவனைக் கவர்ந்து சென்றதைப் போல உன்னை உன் மனைவி கண்டால் கவர்ந்து கொள்ளக்கூடும். ஒருவேளை என்னை விட்டுப் பிரிந்து போக நினைத்தால் வஞ்சி நகரையொத்த தன் நலத்தினைத் தந்நுவிட்டுச் செல் எனக் கூறுகிறாள். மேற்குறித்த பாடலில் பதிவுசெய்யப் பெற்றிருக்கும் இப்பதிவின்வழி ஆரிய வேந்தரைச் சேரன் அலறத் தாக்கிய வரலாற்று நிகழ்வும், வளம்பொருந்திய வஞ்சி மாநகரின் சிறப்பும் நன்கு புலனாகிறது.

## மாந்தரம் பொறையன் கடுங்கோ

பொறையன் கடுங்கோ எனும் சேரவேந்தனே மாந்தரம் பொறையன் கடுங்கோ என்றும் அழைக்கப் பெறுகின்றான். பொறையன் என்பதற்குப் 'பொறை நாட்டோடு தொடர்புடையவன்' என்றும் கடுங்கோ என்பதற்கு 'அரசன்' என்றும் பொருள் தருகின்றது. இதனை,

'நிறைஅருந் தானை வெல்போர் மாந்தரம்

பொறையன் கடுங்கோ பாடிச்சென்ற

குறையோர் கொள்கலம் போல' (அகம். 142)

என்ற வரிகள் இரவு நேரத்தில் யாரும் அறியாவண்ணம் தலைவியைச் சந்தித்துக் கூடி மகிழ்ந்திருந்த இன்பமானது எவ்வாறுறு இருக்குமெனில் பகைவர்களால் தடுத்து நிறுத்த முடியாத

அளவிற்குப் படைவலிமையை உடையவன் மாந்தரம் பொறையன் கடுங்கோ எனும் சேர மன்னனின் வெற்றிச் சிறப்பினைப் பாடிச் சென்ற புலவர்கள் நினைத்தற்கரிய அணிகலன்களைப் பரிசாகப் பெற்று மகிழ்வதுபோல இருந்தது என்று கூறுகிறாள். மேற்குறித்த பதிவின்வழித் தலைவன் தலைவியுடன் கூடி மகிழ்ந்திருந்த இன்பத்தினை விளக்குவதற்குப் பொறையன் கடுங்கோவின் கொடைச் சிறப்பு உவமையாக்கப் பெற்றுள்ளது.

## பெருஞ்சோற்று உதியன் சேரலாதன்

சேரர்களின் பொற்காலத்திற்கு வித்திட்ட மூல முதல்வன் இவனே. குட்டநாட்டு வஞ்சி நகரைத் தலைநகராகக் கொண்டு சேர நாட்டை ஆண்ட வேந்தர்களுள் மிகவும் பழையோனாக இவ்வுதியன் சேரலாதன் திகழ்கிறான். புறநானூறு இவனை பெருஞ்சோற்றுதியன் சேரலாதன் என்று குறிப்பிடுகிறது. இவன் இமய வரம்பனின் தந்தை ஆவான். வி. டி. மஹாஜன் அவர்கள் 'உதியஞ்சேரலாதன் என்னும் சேர வேந்தன் பெருஞ்சோற்று உதியன் சேரலாதன் என்று போற்றப்படுகின்றான். 'சேரர் குடியில் தோன்றிய முதல் மன்னன், வஞ்சியைத் தலைநகராகக்கொண்டு ஆட்சி செய்தவன் என்பார்.1

உதியனது சேரநாடு கிழக்கில் கொங்கு நாட்டிலும் பரவியிருந்தது. அப்பகுதியில் குழுமூர் என்பது ஓர் ஊர். இப்போது உடுமலைப்பேட்டை தாலுகாவில் அது குழுமம் என்ற பெயருடன் விளங்குகிறது. ஒருகாலத்தில் அப்பகுதியில் கடும்போர் நிகழ்த்தி வெற்றி பெற்ற உதியஞ்சேரல் தன்னோடு போர்க்களம் புகுந்து பகைவரோடு போர் நிகழ்த்தி துறக்கம் எய்திய சான்றோர்கள் பொருட்டுப் பெருஞ்சோற்று விழா ஒன்றினைச் செய்தான். (அகம். 233)

இதனைப் 'பிண்டம் மேய பெருஞ்சோற்று நிலை'2 என்று தொல்காப்பியர் கூறுவதனால் இது தமிழ் மக்களிடையே தொன்றுதொட்டு வரும் மரபு என்பது தெளியப்படும். இது குறித்துப் புறப் பொருள் வெண்பா மாலை, வஞ்சித் திணையில், பெருஞ்சோற்று நிலை (22) எனும் பிரிவில்,

'திருந்தார் தெம்முனை தெறுகுவர் இவரெனப்

பெருஞ்சோறு ஆடவர் பெறுமுறை வகுத்தன்று' 3

எனக் கூறுகிறது.

## ஒள்வாள் கோப்பெருஞ்சேரல் இரும்பொறை

'ஒள்வாள் கோப்பெருஞ்சேரல் இரும்பொறை என்பான் சேரநாட்டைப் புரந்திருத்தல் வேண்டும். இவனே 'கொங்கு நாட்டில் வடக்கே பூவானியாறு வரையும், கிழக்கே கொங்கு வஞ்சி (தாராபுரம்) வரையும் பரவியிருந்த பொறைநாட்டைக் கீழ்க்கொங்கு நாட்டுக் கருவூர் வரையில் பரப்பிய முதற் சேரமான்' என்கிறார் துரைசாமிப்பிள்ளை. இவனே கடைச்சங்ககால சேரமன்னர்களில் முதல் மன்னனாக அறியப்படுகிறான். இவன் கருவூர் ஏறிய ஒள்வாள் கோப்பெருஞ்சேரல் இரும்பொறை எனவும் அழைக்கப்படுகிறான்.

கடுமையான வெயில் வீசுகின்ற இந்தக் கோடைக்காலத்தில் யாரோ ஒருத்தியின் மகன் என் மகளை வழிப்பறிக் கொள்ளையர்கள் வாழும் காட்டுவழியில் அழைத்துச் சென்றுவிட்டான். அப்படிப்பட்ட வழிப்பாதையில் என் மகள் தன் உயிரையும் பொருட்படுத்தாது அந்த ஆண் மகனோடும் செல்ல முற்பட்ட அன்பின் ஆழம் முன்னமே எனக்குத் தெரிந்திருந்தால் ஒளிபொருந்திய வேலைக் கையிலேந்தி வஞ்சி மாநகரைக் காவல் செய்யும் கோப்பெருஞ்சோழனைப் போல நானும் என் மகளைக் காத்திருப்பேனே எனக் கூறுவதை,

'ஒளிறுவேல் கோதை ஓம்பிக் காக்கும்

வஞ்சி அன்னஎன் வளநகர் விளங்க

இனிதினின் புணர்க்குவென்; மன்னோ துனிஇன்று" 4

எனும் அடிகள் தாயின் புலம்பலைக் கூறுவதோடு, சேரனின் புகழ், அவனது தலைநகரான வஞ்சி மாநகரின் புகழ் ஆகியவற்றையும் எடுத்துரைக்கிறது.

## இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்

முதியர்ப் பேணிய உதியஞ் சேரலுக்கும் வெளியன் வேண்மான் நல்லி என்பவளுக்கும் பிறந்தவன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன். குடக்கோ நெடுஞ்சேரலாதன், குடவர் கோமான் நெடுஞ்சேரலாதன், சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதன் என்று சங்க இலக்கியங்கள் இவனைக்

குறிப்பிடுகின்றன. இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைத் தலைவனாகக் கொண்டு குமட்டூர் கண்ணனார் பாடிய பத்துப் பாடல்கள் பதிற்றுப்பத்தில் இரண்டாம் பத்தாக இடம் பெற்றுள்ளது.

நெடுஞ்சேரலாதன் பெரும்படையுடன் வடநாடு சென்று அங்குத் தன்னை எதிர்த்த ஆரிய அரசர்களை வென்று வணங்கச் செய்து இமயம்வரை சென்று அரச இலச்சினையாகிய வில்லைப் பொறித்து மீண்டான். எனவேதான் இமயவரம்பன் என்ற பெயரோடு அவன் வெற்றிச் சிறப்பு புகழப்படுகிறது. இதனை,

'இமயத்து

முன்னோர் மருள வணங்கு வில்பொறித்து' 5

என்ற அகப்பாடலால் அறிய முடிகிறது.

## களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல்

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனுக்கும் வேளாவிக்கோமான் மகளுக்கும் பிறந்தவன் களங்காய்க் கண்ணி நார்முடிச்சேரல். களங்காயால் செய்த கண்ணியும் நாரால் செய்த முடியும் அணிந்து அரசப் பொறுப்பை ஏற்றமையால் இவனுக்குக் களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல் என்ற பெயர் காரணச் சிறப்புப் பெயராய் ஏற்பட்டதாகும் (பதிற்றுப்பத்து39). இவனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு காப்பியாற்றுக் காப்பியனார் பாடிய பத்து பாடல்கள் பதிற்றுப்பத்தில் நான்காம் பத்தாக இடம்பெற்றுள்ளது. 'சேர நாட்டிற்குரிய அனைத்துப் பகுதிகளையும் ஆளும் நாள்வரை சேரர்க்குரிய கண்ணியும் முடியும் புனையேன்' எனச் சூளுரைத்து அவற்றிற்கு ஈடாக களங்காய்க்கண்ணியும் நார்முடியும் புனைந்து நின்றதனால் இப்பெயர் பெற்றான் எனவும் கூறப்படுகிறது.

இவன் நேரிமலையில் இருந்துகொண்டு நெடுஞ்சேரலாதன் சிறப்பில் சீரழிந்த சேரநாட்டைச் சீர்திருத்தும் பணியில் ஈடுபட்டான். மூன்றாம் நன்னனோடு வாகைப் பெருந்துறையில் போர்செய்து அவனால் முன்பு கைப்பற்றப்பட்ட சேரநாட்டின் பகுதிகளை மீட்டான். பூழி நாட்டின்மேல் படையெடுத்து அதைச் சேர நாட்டுடன் இணைத்தான். நார்முடிச்சேரல் போர் வீரர்களுக்கு ஊக்கமளித்துப் போர்களை வென்றான். சேரநாட்டுப் பெருவழிகளில் கள்வர்கள் நடமாட்டத்தையொழித்து மக்களின் அச்சத்தைப் போக்கினான். குடிமக்களின் வறுமையைத் தீர்த்துச் செழுமையுறச் செய்தான். செங்குட்டுவன் சேரநாட்டை வலிமையுடையதாகச் செய்வதற்கு அடிப்படை அமைத்தவன் நார்முடிச்சேரலே. இதனை,

'இரும்பொன் வாகைப் பெருந்துறைச் செருவில்

பொலம்பூண் நன்னன் பொருதுகளத் தொழிய

வலம்படு கொற்றம் தந்த வாய்வாள்

களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல்

இழந்த நாடு தந்தன்ன' - (அகம். 199)

என்ற கல்லாடனாரின் அகப்பாடலடிகள் களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல் தன் நாட்டிற்கு மேற்கேயிருந்த வாகைப் பெருந்துறை என்னுமிடத்தில் நடந்த போரில் நன்னனை எதிர்த்துத் தோற்கடித்து வெற்றிபெற்றான் என்றும், தான் முன்னம் நன்னனிடம் இழந்திருந்த நாட்டை மீண்டும் கைப்பற்றினான் என்று சேரலின் போர்ச் சிறப்பினைக் கூறுகின்றன.

## கடல் பிறக்கோட்டிய சேரன் செங்குட்டுவன்

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனுக்கும் சோழன் மகள் மணக்கிள்ளிக்கும் பிறந்தவன் சேரன் செங்குட்டுவன். கடல் பின்னிடுமாறு அதன் அலைப்பரப்பினூடே குதிரையூர்ந்து நீர்ப்பரப்பினுள்ளே வேலெறிந்த சிறப்பினால் கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன் என அழைக்கப்பட்டான். இவனைத் தலைவனாகக் கொண்டு பரணர் பாடிய பாடல்கள் பதிற்றுப்பத்தின் ஐந்தாம் பத்தாக உள்ளது.

'மட்டவிழ் தெரியல் மறப்போர் குட்டுவன்

பொருமுரண் பெறாஅது விலங்குசினம் சிறந்து

செருச்செய் முன்பொடு முந்நீர் முற்றி

ஓங்குதிரைப் பௌவம் நீங்க ஓட்டிய' - (அகம். 212)

எனவரும் அகப்பாட்டில் செங்குட்டுவன் கடல் பிறக்கோட்டி வேலெறிந்து வெற்றி பெற்றதைப் பரணரின் பாடலால் அறியமுடிகிறது. செங்குட்டுவனின் மோகூர் வெற்றி. தென்னாட்டு வடநாட்டு

வெற்றிகள், வியலூர் கொடுகூர்ப் போர்கள், நேரிவாயில் கொங்கர் செங்கப்போர், வடவாரியரோடு வண்டமிழ்ப் போர், கங்கைப் போர், இமயப்படையெடுப்பு ஆகிய போர்களில் செங்குட்டுவன் வெற்றி பெற்றான். செங்குட்டுவனின் இமயப் படையெடுப்பைத் தொடர்ந்து கண்ணகிக்குக் கோயில் எழுப்பி மங்கலப் பெருவிழாவிற்கு கடல்சூழ் இலங்கைக் கயவாகு வேந்தனும் வந்திருந்ததாகச் சிலப்பதிகாரம் கூறுகின்றது.

## கோக்கோதை மார்பன்

சேரமான் கோக்கோதை மார்பன் வஞ்சியிலிருந்து ஆட்சிபுரிந்த வலிமையற்ற அரசனாவான். மாந்தரஞ்சேரல் இறந்தவுடன் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் வஞ்சியின்மேல் படையெடுத்து அதை முற்றுகையிட்டான். கோதை மார்பன் கோட்டைக்குள் ஒளிந்திருந்தான். ஆலத்தூர் கிழாரும் மாறோகத்து நப்பசலையாரும் சிபியின் மரபில் வந்த கிள்ளிவளவன் கோட்டைக்குள் பதுங்கிய சேரனோடு போர்புரிவது தகாது என்று எடுத்துக் கூறினர். கிள்ளிவளவன் புலவர்களின் வேண்டுகோளுக்கு செவி சாய்க்காமல் வஞ்சி நகரின் அகழியையும் நீர்நிலைகளையும் மதிலையும் ஊர்களையும் அழித்தான்.

தொண்டியைத் தலைநகராகக் கொண்டு சேரநாட்டை ஆண்ட மற்றொரு கோக்கோதை மார்பன் உள்ளான். கிள்ளிவளவன் என்னும் சோழ மன்னன் மதுரை பாண்டியனை வென்று களிறும் புரவியும் கணக்கில் கைப்பற்றிக் கொண்டதைக் கேட்டு கோக்கோதை மார்பன் மகிழ்ந்தான் என்று அகப்பாடலொன்று குறிப்பிடுவதால் இத்தோல்வி தன் பகையைத் தொலைத்ததால் சேரமான் கோக்கோதை மார்பன்; மகிழ்ந்திருக்க வேண்டும் என்றும் கருத இடமளிக்கிறது. இதனை,

'இழையணி யானைப் பழையன் மாறன்

மாடமலி மறுகின் கூடல் ஆங்கண்

வெள்ளத் தானையொடு வேறுபுலத்து இறுத்த

கிள்ளி வளவன் நல்லமர் சாஅய்.

கோதை மார்பன் உவகையின் பெரிதே'(அகம். 346)

என்னும் பாடலடிகள் மேற்கூறிய வரலாற்றை விளக்குகிறது.

யானைக்கண் சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை

சேரமான் யானைக்கண் சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை சங்ககாலச் சேர வேந்தர்களுள் ஒருவன். இவன் மாந்தை எனும் நகரைத் தலைநகராகக்

கொண்டு ஆண்டதால் மாந்தரன் எனவும் அழைக்கப்பட்டான். இவன் கொங்கு நாட்டைச் சார்ந்த கருவூரைத் தலைநகராகக் கொண்டும் சேரநாட்டை ஆண்டனான். இவன் தொண்டியை இளஞ்சேரல் இரும்பொறையிடமிருந்து கைப்பற்றித் தொண்டியைத் தலைநகராகக் கொண்டும் ஆண்டான். யானைக்கண் சேய் பேராற்றலும் பேராண்மையும் உடையவன். யானை போலப் பெருமித நோக்கு உடையவன். எனவே இவனை 'யானைக்கட் சேய்' என்றனர். குறுங்கோழியூர்க் கிழார், பேரிச்சாத்தனார், பொருந்தில் இளங்கீரனார் போன்ற பல புலவர்கள் இவனைப் பாடியுள்ளனர். 'வேழ நோக்கின் விறல்வெஞ் சேஎய்'எனவும், மாந்தரஞ்சேரல் இரும்பொறை' என இயற்பெயர் கொண்ட இரும்பொறை மரபினரான இவன் யானையின் கண் போன்ற கண் பெற்றிருந்ததால் அவ்வாறு அழைக்கப்பட்டான் என்கிறார் குறுங்கோழியூர்க்கிழார். இவனது சிறப்பைக் கூறும்போது,

'சோறு படுக்கும் தீயோடு

செஞ் ஞாயிற்றுத் தெறல் அல்லது

பிறிது தெறல் அறியார் நின் நிழல்வாழ் வோரே

திருவில் அல்லது கொலைவில் அறியார்;

நாஞ்சில் அல்லது படையும் அறியார்; 6

எனத் தம்; நாட்டின் மீது படையெடுத்து வரும் எந்தப் படையையும் பார்த்தறியாதவன் என்கிறார். தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனால் தலையாலங்கானப் போரில் சேரமான் யானைக்கண்சேய் மாந்தரஞ்சேரல் தோற்கடிக்கப்பட்டு சிறை வைக்கப்பட்டான். அச்சிறையிலிருந்து தப்பிவந்து தான் அரசுக்கட்டில் ஏறிய சிறப்புமிகு நிலையை புறப்பாடல் வாயிலாக அறிகிறோம் 7

## முடிவுரை

காலங்காட்டும் கண்ணாடியாம் இலக்கியங்களின் வாயிலாக குறிப்பாக சங்க இலக்கியங்கள் வாயிலாக மூவேந்தர்கள் குறித்து அறிந்து கொள்ளமுடிகிறது. சேரவேந்தர்கள் போர் மேற்கொண்டதற்கான முக்கியக் காரணம் நாட்டின் எல்லையை விரிவுபடுத்துவதை நோக்கமாகக் கொண்டதே என்பது புலனாகிறது. மன்னர்களின் செயல்கள், ஈடுபட்ட போர்க்களங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் வேந்தர்களுக்கு புனைப்பெயர்கள் சுட்டப்பட்டன. களங்காய்க்கண்ணியையும் நார்முடியையும் அணிந்ததால் கயங்காய்க் கண்ணி நார்முடிச்சேரல் எனவும் ஈடுபட்ட போர்க்களங்களால் மாந்தரஞ்சேரல் இரும்பொறை, செருப்பாழி எறிந்த இளஞ்சேட்சென்னி, இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், தொண்டைமான் இளந்திரையன் போன்ற பெயர்களைக் கூறலாம். சேரர்கள் இந்தியாவின் எல்லை வரையிலும் சென்று போரிட்டு எல்லையை விரிவுபடுத்தியமையையும், இவர்கள் கடற்போர்களில் ஈடுபட்டமை குறித்தும் அறியமுடிகிறது. அகநானூற்றில் சேர வேந்தர்கள் குறித்த வரலாற்றுப் பதிவுகள் 32-இடங்களில் பதிவு செய்யப்பெற்றுள்ளன.

## References


தொல்காப்பியம் பொருளதிகாரம் புறத்திணை, இளம்பூரணர் உரை

புறப்பொருள் வெண்பாமாலை திருஞானசம்பந்தம் உரை

புறநானூறு புலியூர் கேசிகன் உரை

பதிற்றுப்பத்து புலியூர் கேசிகன் உரை

V.D.Mahajan, Anciant India.

சாமி சிதம்பரனார் சேரர் வரலாறு.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License